# யூலை – 05 – வெள்ளி

**புனித அந்தோனி செக்கரியா - மறை பனியாளர்**

**நீர் தேர்ந்தெடுத்த மக்களின் நல்வாழ்வை நான் காணும்படி செய்யும்: திபா. 106:5**

---

## முதல் வாசகம்: தொடக்க நூல்23:1–4,19,24:1–8,62-67

அந்நாட்களில் சாரா நூற்றிருபத்தேழு ஆண்டுகள் வாழ்ந்தார். சாராவின் வயது இதுவே. கானான் நாட்டிலுள்ள எபிரோன் என்ற கிரியத்து அர்பா நகரில் சாரா இறந்தார். அவருக்காகப் புலம்பி அழுவதற்காக ஆபிரகாம் சென்றார். பிறகு சடலம் இருந்த இடத்தை விட்டு அவர் எழுந்து இத்தியரிடம் சென்று சொன்னது. "நான் உங்களிடையே அன்னியனும், அகதியுமாய் இருக்கிறேன். என் வீட்டில் இறந்தாரை நான் அடக்கம் செய்வதற்கான கல்லறை நிலத்தை உங்களுக்குரிய சொத்திலிருந்து எனக்கு விற்று விடுங்கள்" என்றுகேட்டார். இவ்வாறு மம்ரே அருகில் மக்பேலா நிலத்தின் கல்லறையில் ஆபிரகாம் தம் மனைவி சாராவை அடக்கம் செய்தார். இதுவே கானான் நாட்டில் இருக்கும் எபிரோன். ஆபிரகாம் வயதுமிகுந்தவராய் முதுமை அடைந்தார். ஆண்டவர் அவருக்கு அனைத்திலும் ஆசிவழங்கியிருந்தார். ஒருநாள் அவர் தம்வீட்டின் வேலைக்காரர்களில் மூத்தவரும், தமக்குரிய அனைத்திற்கும் அதிகாரியுமானவரை நோக்கி, "உன் கையை என் தொடையின் கீழ் வைத்து, விண்ணுலகிற்கும் மண்ணுலகிற்கும் கடவுளாகிய ஆண்டவர் மேல் ஆணையிட்டுச்சொல் நான் வாழ்ந்துவரும் இக் கானான் நாட்டுப் பெண்களிடையே என் மகனுக்குப் பெண்கொள்ள மாட்டாய் என்றும், சொந்த நாட்டிற்குப் போய், என் உறவினரிடம் என் மகன் ஈசாக்குக்கு பெண்கொள்வாய் என்றும் சொல்" என்றார். அதற்கு அவர், "ஒரு வேளை பெண் என்னோடு இந்நாட்டிற்கு வர மறுத்துவிட்டால் தாங்கள் விட்டுவந்த அந்நாட்டிற்குத் தங்கள் மகனைக் கூட்டிக்கொண்டு போகலாமா?" என்றுகேட்டார். அதற்கு ஆபிரகாம், "அங்கே என்மகனை ஒருக்காலும் கூட்டிக்கொண்டு போகாதே. கவனமாயிரு. தந்தை வீட்டினின்றும் நான் பிறந்த நாட்டினின்றும் என்னை அழைத்து வந்து என்னோடு பேசி, "இந்த நாட்டை உன் வழிமரபினருக்குத் தருவேன்" என்று ஆணையிட்டுக் கூறிய அந்த விண்ணுலகின் கடவுளாகிய ஆண்டவரே உனக்குமுன் தம்தூதரை அனுப்பி வைப்பார். நீ போய், அங்கே என்மகனுக்குப் பெண்கொள். உன்னோடு வர அப்பெண் விரும்பாவிடில் எனக்கு நீ அளித்த வாக்குறுதியினின்று விடுதலை பெறுவாய். என்மகனை மட்டும் அங்கே கூட்டிக்கொண்டு போகாதே" என்றார். இதற்கிடையில், பெயேர்லகாய்ரோயி என்ற இடத்திலிருந்து ஈசாக்கு புறப்பட்டு நெகேபு பகுதியில் வாழ்ந்து வந்தார். மாலையில் வெளியே வயல்புறம் சென்றபோது அவர் கண்களை உயர்த்திப் பார்த்தபோது, ஒட்டகங்கள் வருவதைக்கண்டார். ரெபேக்காவும் கண்களை உயர்த்தி ஈசாக்கைப் பார்த்தார். உடனே அவர் ஒட்டகத்தைவிட்டு இறங்கினார். அவர் அந்த வேலைக்காரரிடம், ""வயலில் நம்மைச் சந்திக்க வந்து கொண்டிருக்கும் அவர் யார்?" என்று கேட்டார். அவ்வேலைக்காரரும், "அவர்தாம் என் தலைவர்" என்றார். உடனே ரெபேக்கா தம்முக்காட்டை எடுத்து தம்மை மூடிக்கொண்டார். அப்பொழுது அவ்வேலைக்காரர் ஈசாக்கிடம் தாம் செய்தது அனைத்தையும் பற்றிக்கூறினார். ஈசாக்கு தம் தாயார் சாராவின் கூடாரத்துக்குள் ரெபேக்காவை அழைத்துச்சென்று மணந்து கொண்டார். அவரும் ஈசாக்குக்கு மனைவியானார். அவர் ரெபேக்கா மீது அன்பு வைத்திருந்தார். இவ்வாறு தம்தாயின் மறைவுக்குப் பிறது ஈசாக்கு ஆறுதல் அடைந்தார்.

**பதில்பாடல் :** ஆண்டவருக்கு நன்றி செலுத்துங்கள் ஏனெனில்
அவர் நல்லவர்.

## நற்செய்தி : மத்தேயு 9 : 9 – 13

அக்காலத்தில் மத்தேயு என்பவர் சுங்கச் சாவடியில் அமர்ந்திருந்ததை இயேசு கண்டார் அவரிடம், "என்னைப் பின்பற்றி வா" என்றார். அவரும் எழுந்து இயேசுவைப் பின்பற்றிச் சென்றார். பின்பு அவருடைய வீட்டில் பந்தியில் அமர்ந்திருந்தபோது வரி தண்டுபவர்கள், பாவிகள் ஆகிய பலர் வந்து இயேசுவோடும் அவருடைய சீடரோடும் விருந்துண்டனர். இதைக்கண்ட பரிசேயர் அவருடைய சீடரிடம், "உங்கள் போதகர் வரிதண்டுபவர்களோடும் பாவிகளோடும் சேர்ந்து உண்பது ஏன்?" என்றுகேட்டனர். அக்காலத்தில் மத்தேயு என்பவர் சுங்கச்சாவடியில் அமர்ந்திருந்ததை இயேசு கண்டார் அவரிடம், "என்னைப் பின்பற்றி வா" என்றார். அவரும் எழுந்து இயேசுவைப் பின்பற்றிச் சென்றார். பின்பு அவருடைய வீட்டில் பந்தியில் அமர்ந்திருந்தபோது வரி தண்டுபவர்கள், பாவிகள் ஆகிய பலர் வந்து இயேசுவோடும் அவருடைய சீடரோடும் விருந்துண்டனர். இதைக் கண்ட பரிசேயர் அவருடைய சீடரிடம், "உங்கள் போதகர் வரிதண்டுபவர்களோடும் பாவிகளோடும் சேர்ந்து உண்பது ஏன்?" என்று கேட்டனர். இயேசு இதைக் கேட்டவுடன், "நோயற்றவர்க்கு அல்ல, நோயுற்றவர்க்கே மருத்துவர் தேவை. "பலியை அல்ல, இரக்கத்தையே விரும்புகிறேன்" என்பதன் கருத்தை நீங்கள் போய்க் கற்றுக் கொள்ளுங்கள் ஏனெனில் நேர்மையாளரை அல்ல, பாவிகளையே அழைக்க வந்தேன்" என்றார். அக்காலத்தில் மத்தேயு என்பவர் சுங்கச்சாவடியில் அமர்ந்திருந்ததை இயேசு கண்டார் அவரிடம், "என்னைப் பின்பற்றி வா" என்றார். அவரும் எழுந்து இயேசுவைப் பின்பற்றிச் சென்றார்.

**தியானம்:** இன்றைய தியான வாசகங்கள் இறைவன் சாதி, மதம், பட்டம், பதவி பார்த்து தகுதிக்கு ஏற்றவாறு அழைப்பவரல்ல, மாறாக அவர் யார் யாரை அழைக்க வேண்டுமென்று முன்குறித்து வைத்துள்ளாரோ அவர்களை "தாயின் கருவயிறறில் உருவாகுமுன்னே நான் உன்னை தெரிந்து கொண்டேன்" என்று இறைவார்த்தையில் பார்க்கின்றோம். நற்செய்தி வாசகத்திலும் கூட சுங்கச் சாவடியில் அமர்ந்திருந்த மத்தேயுவை இயேசு அழைக்கின்றார். அவர் இன்று எங்களையும் அழைத்திருக்கின்றார். ஆனால் நாங்கள் உலக மாயைகளினாலும், ஆசாபாசங்களினாலும் அடிமைப்படுத்தப்பட்டு அவர் அழைப்பினை இனங்கண்டு கொள்ள முடியாதவர்களாக மந்தையை விட்டுச் சென்று விலகிய ஆடுகள் போன்று வாழ்ந்துகொண்டிருக்கிறோம். நாங்கள் ஒவ்வொவரும் பாவிகள்தான் எவ்வாறாக இருப்பினும் அவர் மனம் மாறும் பாவியைக் குறித்து மன்னித்து புதுவாழ்வு தருபவர், எனவேதான் "நீதிமான்களை அல்ல பாவகளையே தேடிவந்தேன்" என்று இறைமகன் இயேசு கூறி அன்று எங்களையும் அழைத்துச் செல்ல சித்தங் கொண்டுள்ளார். எனவே நாங்களும் அவர் அழைப்பிற்கு செவிகொடுத்து, அவ்வழைப்பின் மூலமாக எமக்குக் கொடுத்த பணிகளை நல்ல முறையில் நிறைவேற்ற தூய ஆவியானவரிடம் வரம் வேண்டுவோம்.